**செ.வெ.எண்: 89** **நாள்:31.01.2017**

## <u>பத்திரிகைச்செய்தி</u>

புதுக்கோட்டை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு TNSRLM மற்றும் புதுவாழ்வுத் திட்டம் வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 18 முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு (ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும்) தனியார் தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட முதல் கட்டமாக விராலிமலை, அன்னவாசல், மற்றும் குன்றான்டார்கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற ஆண் மற்றும் பெண் இருபாலரும் பயன்பெறும் வகையில் **அன்னவாசல் அரசு மேல்நிலைப்பள்ளியில் 04.02.2017** அன்று வேலை வாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதால், தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்கள் உரிய மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், சாதி சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, (Ration Card) மற்றும் தொழிற் பயிற்சி தொடர்பான சான்றிதழ்களுடன் கலந்து கொள்ளவும் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களும் பங்கு பெற்று இளைஞர்களை வேலைக்கு தேர்வு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட மூன்று ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் அனைத்து தனியார் தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு முகாமில் பங்கு பெற்று இருபாலருக்கும் (ஆண் மற்றும் பெண்) வேலை வாய்ப்பு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**